முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்

நாள்.23.02.2026

RLTOP No.1/2025

ம.சா-2 தஸ்தாகிர்

எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை.

மனுகட்டிடம் எந்த சர்வேயில் அமைந்துள்ளது என எனக்கு தெரியாது. கட்டிடத்தின் கதவு எண்.31/எ ஆகும் பழைய எண் தெரியாது. கட்டிடத்தின் பரப்பளவு தெரியாது. 2007 க்கு முன் மனுகட்டிடத்தில் யார் வாடகைக்கு இருந்தார் என்றால் தெரியாது. மாணிக்கத்தின் அப்பா பெயர் பார்த்திபன் ஆகும். பார்த்திபன் எத்தனை வருடமாக அந்த கட்டிடத்தில் வாடகைக்கு இருந்தார் என்றால் நான் 2014 ல் அங்கு வந்தேன் அதற்கு பின்பு தான் தெரியும் அதற்கு முன்பு தெரியாது. 2014 ல் இருந்து பார்த்திபனிடம் மாதம் 7000 ரூபாய் வாடகை வாங்கினேன். 7000 தொகையை மனுகட்டிடம் இடிப்பதற்கு முன்பு வரை 2022 வரை வாங்கினேன். 2014 ல் இருந்து 2022 வரை வாடகையை உயர்த்தவில்லை என்றால் சரி. நான் சங்கம் சாகிப்பிடம் வேலை பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை. நான் தகரத்தில் வாளி குடம், ரங்கு பெட்டி செய்யும் வேலையை சுமார் 14 ஆண்டு காலம் 1990 வரை பார்த்து வந்தேன்.எனக்கு சொந்த தொழில் ஆகும். அதற்கு பின்பு எடுபிடி வேலையும் சமையல் மாஸ்டர் வேலையும் பார்த்து வந்தேன்.

சங்கம் சாகிப்பை 2014 ல் இருந்து பழக்கம். சங்கம் சாகிப்பிற்கு டவுணிற்குள் பிரதானமாக எந்தெந்த இடத்தில் எந்தெந்த கட்டிட சொத்துக்கள் உள்ளதென்ற விவரம் எனக்கு தெரியாது. ஆசாத் கார்டன், ஆசாத் நகர் , மனுசொத்து கட்டிடம் ஆகியவற்றிற்கு வாடகை வசூலிப்பேன். மின்கட்டணம் போன்ற கட்டணங்களை செலுத்துவேன். மனுசொத்திற்கு வாடகை வசூல் செய்ய எனக்கு அதிகார ஆவணம் எதுவும் எழுதி கொடுத்துள்ளாரா என்றால் இல்லை. மனுகட்டிடத்தின் உள்ளே சென்று பார்த்துள்ளேனா என்றால் ஆம், மனுகட்டிடத்தின்அளவு சுமார் 2000 என சொன்னார்கள் நான் டேப் வைத்து அளக்கவில்லை. சங்கம் சாகிப் மற்றும் பார்த்திபனுக்கிடையே மனுகட்டிடத்தின் வாடகை பத்திரம் பற்றி தெரியுமா என்றால் தெரியாது. மனுகட்டிடத்தின் வாடகை

சம்மந்தமாக எந்த ஆவணத்தையும் நான் பார்த்ததில்லை. கடை உரிமையாளருக்கும் மாணிக்கத்துக்குமிடையேயான எந்த விவரமும் எனக்கு தெரியாது.

வங்கி மூலமாக வாடகை செலுத்திய விவரத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை எனக்கு தெரியாது. மனுகட்டிடத்தை தவிர வேறு சொத்துக்களுக்கு வாடகை 2022 க்கு பிறகு வசூல் செய்தேனா என்றால் இல்லை. 2022 க்கு பிறகு பார்த்திபனிடம் வாடகை சம்பந்தமாக நான் எப்போதும் பேசவில்லை என்றால் சரி. பார்த்திபன் மனுதாரருக்கு எதிராக தாக்கல் செய்த அசல் வழக்கின் விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மனுகட்டிடத்தில் டீகடை ே◌ஹாட்டல், பேக்கரி நடந்து வருகிறது. நான் மனுதாரருக்கு உறவினரா என்றால் இல்லை. நானும் மனுதாரரும் ஒரே ஊரை சேர்ந்தவர் என்றால் சரி. நான் மனுதாரருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் சொல்கிறேன் என்றாலும் எந்த காலத்திலும் மனுசொத்திற்கு வாடகை வசூல் செய்கிறேன் என்றாலும் சரியல்ல.